செ.வெ.எண்: 416 நாள்: 24/05/2010

<u>மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எம்சிஏ.1) துறை</u>

<u>பத்திரிக்கைச் செய்தி</u>

எம்.பார்ம் (M.Pharm) முதுகலை பட்டப்படிப்பில் அரசு மருத்துவக் கல்லூரிகளில் மொத்தம் 64 இடங்கள் உள்ளன. இதில் 50 விழுக்காடு அரசு பணி மாணவர்களுக்கும் 50 விழுக்காடு தனியார் மாணவர்களுக்கும் ஒதுக்கப்பட்டு மாணவர் சேர்க்கை நடைபெற்று வருகிறது. நடப்பாண்டு 2010 11 ஆம் கல்வியாண்டில் எம்.பார்ம் முதுகலை பட்டப்படிப்பு பயில அரசுப்பணி மாணவர்களுக்கு ஒதுக்கப்பட்ட 32 இடங்களுக்கு நான்கு அரசுப்பணி மாணவர்கள் மட்டுமே விண்ணப்பித்திருந்தனர். ஆதலால் தகுதியான அரசுப்பணி மாணவர்கள் விண்ணப்பிக்காத காரணத்தால் அரசுப்பணி மாணவர்களுக்காக ஒதுக்கப்பட்ட மீதமுள்ள இடங்களை தனியார் மாணவர்களுக்கு ஒதுக்க அரசு திருத்த ஆணையிட்டுள்ளது. இத்திருத்த ஆணையினால் தனியார் மாணவர்கள் மேலும் இப்படிப்பில் சேருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் பிற்படுத்தப்பட்டோர் /மிகவும் பிற்படுத்தப்பட்டோர் / பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லீம்) / தாழ்த்தப்பட்டோர் / தாழ்த்தப்பட்டோர் அருந்ததியர் / பழங்குடியினர் வகுப்பினைச் சார்ந்தவர்கள் மொத்த மதிப்பெண்ணில் 40 சதவீதமும் ஏனைய வகுப்பினர்கள் 50 சதவீதம் மதிப்பெண்கள் எடுத்தால் மட்டுமே கலந்தாய்வுக்கு தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்ற நிலைக்கு பதிலாக பிற்படுத்தப்பட்டோர் /மிகவும் பிற்படுத்தப்பட்டோர் / பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லீம்) / தாழ்த்தப்பட்டோர் / தாழ்த்தப்பட்டோர் அருந்ததியர் / பழங்குடியினர் வகுப்பினை சார்ந்தவர்கள் மொத்த மதிப்பெண்ணில் 35 சதவீதமும் ஏனைய வகுப்பினர்கள் 45 சதவீதம் மதிப்பெண்கள் எடுத்தாலே கலந்தாய்வுக்கு தேர்ந்தெடுக்கப்படுவார்கள் எனவும் அரசு ஆணையிட்டுள்ளது இத் திருத்த ஆணையினால் கூடுதலாக தகுதியுள்ள மாணவர்கள் பயன்பெறுவார்கள்.

வி.கு.சுப்புராஜ்
அரசு முதன்மைச் செயலாளர்

/உண்மை நகல்/

வெளியீடு, இயக்குநா.
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
கலைமைச் செயலகம், சென்னை-9

பிரிவு அலுவலர்
24/5/10

1/1